மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மதுராந்தகம்.

அ.வ.எண். 196/2012

இந்த நீதிமன்றத்து எழுத்தர் திரு.J.மோகன் என்பவரால் முறையாக பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 2ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10 வது சட்டத்தின் வரைமுறைகளுக்குட்பட்டு 2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ம் நாள் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர். ராம்நாத் | வயது |
| த.பெ(அ) க.பெ | மதம் |
| கிராமம் | வட்டம் |

<u>பி.சா.2 முதல் விசாரணை</u>

**24.11.2025**

இந்த வழக்கில் நான் 2ம் பிரதிவாதி ஆவேன். நான் எனது முதல் விசாரணையை சத்திய பிராமாண வாக்குமூலமாக இன்று தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. 09.01.2014 தேதியில் பெறப்பட்ட அ பதிவேடு சான்றிட்ட நகல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 26.08.2014 தேதியில் வெங்கடசுப்பாரெட்டியார் பெயரில் பெறப்பட்ட அ

பதிவேடு சான்றிட்ட நகல் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 02.12.1960 தேதியில் ஐயப்ப ரெட்டியார் வகையறாகளுக்குள் ஏற்பட்ட பாகபிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 09.03.2006 தேதியில் கெங்கம்மாள் என்பவர் இறந்ததற்காக பெறப்பட்ட இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 17.08.2006 தேதியில் ஐயப்ப ரெட்டியார் என்பவரின் பெயரில் பெறபட்ட இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 07.02.2011 தேதியில் மதுராந்தகம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை சான்றிட்ட நகல் பி.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 22.04.2013 தேதியில் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நீதிபேராணை எண்.8375/2012 உத்தரவு நகல் பி.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 12.08.2011 தேதியில் சசிரேகா மற்றும் பலர் ஏற்படுத்தி கொண்ட பாகபிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**9. 23.08.2017** தேதியில் பெருமாள் ரெட்டியார் என்பவர் இறந்ததற்கான பெறபட்ட இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.**9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**10. 29.08.2017** தேதியில் பெருமாள் ரெட்டியார் என்பவருக்கு பெறபட்ட வாரிசு சான்றிதழ் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.**10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பி.சா.ஆ.**3** பிரதிவாதிகள் ஏற்படுத்துவதற்கு உரிமையில்லாத ஆவணம் என்று வாதி தரப்பில் ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.

(பிரதிவாதி தரப்பில் மேற்சொன்ன வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என வேண்டுகிறார்)

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)